திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அனைத்து அரசு அலுவலகங்களும் குறிப்பாக, வட்டாட்சியர் அலுவலகம், பதிவுத் துறை போன்றவற்றிலும் ஆவணங்களைப் பாதுகாக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. இதுபோன்ற ஓர் ஆவணக் காப்பகம் திருநெல்வேலியில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

உலர் களம் அமைத்தல்

***6831—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் உலர் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2013 அக்டோபர் 24]

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் சிமெண்ட் களம் அமைத்திட சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைப்படி இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்ட பின்னர், சிமெண்ட் களம் கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நுண்ணறிவும், நூதன சிந்தனைகளையும் தன்னுள் கொண்டு, தமிழக மக்கள் பயனுறும் பாதையினைப் பாங்குற அமைத்து, தடம் பார்த்து நடக்கும் சமுதாயத்தில் தடம் பதித்து, தமிழக விவசாயிகளின் விடிவெள்ளியாய், காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வியாய், (மேசையைத் தட்டும் ஒலி) வான்மழை மேகமாய், தரணி போற்றும் தன்னிகரில்லா தலைவியாய், பார் போற்றும் பாங்கான முதல்வராய் விளங்குகிறார்கள். சங்கத் தமிழ் பூமி தந்த எங்கள் சத்தியத் தாயே, திருவரங்கத்து கீதையே, ஈரடியால் உலகளந்த இறைவன் ஈந்திட்ட பேரறிவே, பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, அம்மா! பாரதம் இனி உங்கள் பின்னே! (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் உலர் களம் அமைக்கப்படும் என்ற பதிலை அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் சுமார் 770 எக்டேர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். எனவே, அப்பகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான உலர் களம் அமைப்பதற்கு ஏனாகுடி கிராமத்தில் களம் புறம்போக்கு இடம் உள்ளது. எனவே, சம்பா சாகுபடிக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று, உடனடியாக மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, உலர் களம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் உலர் களம் அமைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்நுழைவு அனுமதி விரைவில் பெறப்படும். அப்படி அனுமதி பெறப்பட்டவுடன், கூடிய விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை மூலமாக விதைப் பொருள்கள் வழங்குவதற்கும், விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கும் வகை வகையாக வேளாண் துறை செலவு செய்வதைப்போல, உலர் களம் அமைப்பதற்கென்று நிதி வரையறுக்கப்பட்டுள்ளதா அல்லது அரசின் விருப்பத்திற்கேற்ப அந்த உலர் களம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

அடுத்து, விவசாயப் பகுதியாக இருக்கின்ற என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில் திருப்பனந்தாள், கதிராமங்கலம், நாச்சியார்கோவில், துக்காச்சி ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு உலர் களம் இல்லை. வரையறுக்கப்பட்ட நிதி இருந்தால், நான் குறிப்பிட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலர் களம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விற்பனைக் குழுமூலம் இந்த உலர் களம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. வேளாண் விற்பனைக் குழுவிற்கு அரசுக்குச் சொந்தமான நிலத்தையோ, தனியாருக்குச் சொந்தமான நிலத்தையோ அவற்றை விலையில்லாமல் அளிக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியில் பயிரிடப்படும் உணவு தானியங்கள் மற்றும் இதர பயிர்களின் பரப்பின் அடிப்படையில், தேவைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, புதிய சிமெண்ட் உலர் களங்கள் அமைக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம்

***28271—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நாகர்கோவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்